16

உ

மஹா கணபதி ஸ்தோத்திரங்களுடன்

ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜபம்



ஸ்ரீ. எஸ். சேஷு அய்யர் மெமோரியல்
சாரிட்டபிள் டிரஸ்ட் வெளியீடு

ஸ்ரீ மஹாகணபதி ஸ்தோத்ரங்களுடன்

ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜபம்

ஸ்ரீ மஹாகணபதி

(கணபதி அக்ரஹாரம்)

தஞ்சை மாவட்டம்



மூலவர்

ஜயத்1வசேஷலோகே1ட்3ய : காவேரீ தீரபூ4ஷணே ।

க3ணபத்1யக்3ரஹாராக்2ய க்3ராமே க3ணபதி1ர்மஹான் ॥

வெளியீடு-1

ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜபம் 1987

சொர்ண விழா வெளியீடு-2

மஹா கணபதி ஸ்தோத்ரங்களுடன்

ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜபம் 1990

வெளியிட்டோர் :

ஸ்ரீ. எஸ். சேஷு அய்யர் மெமோரியல்

சாரிட்டபிள் டிரஸ்ட்,

நெ. 11, அரிசிக்காரன் தெரு,

மயிலாப்பூர், சென்னை-600 004.

Rs 10 = 00

அச்சிட்டோர் :

ஸ்ரீ ராகவஸிம்ஹம் பிரஸ்

11/2 கேசவப்பெருமாள் மேலண்டை வீதி,

மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி: 75225

பொருளடக்கம்

		பக்கம்
i	ஆசியுரை — எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள்	IV
ii	முகவுரை — ஜி ராமநாத வாத்யார்	VI
iii	பதிப்புரை — எம். கிருஷ்ணமூர்த்தி	IX
iv	ஸ்ரீ மஹா கணபதியும், பிரும்ம ஸ்ரீ G. ராமநாத வாத்தியாரும் அனந்தன்	XIII
1.	விநாயகர் அகவல்	2
2.	ஸ்ரீமஹா கணேச பஞ்சரத்னம்	7, 41
3.	ஸங்கஷ்ட நாசனம்—கணேச ஸ்தோத்ரம்	10, 43
4.	ருணா—ஹர கணேச ஸ்தோத்ரம்	11, 44
5.	ஸ்ரீ வல்லபேச கராவலம்பன ஸ்தோத்ரம்	14, 45
6.	ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜப:	19, 48

உ

ஸ்ரீ ராமஜெயம்

எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள்
வேதாந்த மீமாம்ஸா சிரோமணி,
ப்ரவசன ப்ரவீண, பால சரஸ்வதி,
புராண ரத்ன, பாகவத ஸுதா வர்ஷி,
வேத வித்யாசார்ய, உபந்யாஸ-
சக்ரவர்த்தி, விசிஷ்ட க்ரஹ யஜ்ஞ
பாஷ்யமணி.

நெ. 7, சகோஜி பண்டிட் தெரு,
மேலக்காவேரி,
கும்பகோணம்,
612002

ஆசியுரை

ஆரோக்[3]யம் பா[4]ஸ்கராத் இச்[1]சே[2]த்
ச்ரியம் இச்[1]சே[2]த் ஹுதாசநாத் ।
ஈசாநாத் ஜ்ஞானம் அந்விச்[1]சே[2]த்
ஸர்வம் இச்[1]சே[2]த் க[3]ணதி[4]பாத் ॥

ஸூர்யனை வழிபடுவதால் நோயற்ற வாழ்வும், அக்னியை வழிபடுவதால் செல்வமும், சிவனை வணங்குவதால் அறிவும் பெறலாம். கணபதியை வழிபட்டால் (முன் கூறிய) எல்லாப் பயன்களையும் அடையலாம்.

மேலும் ஒவ்வொரு பயனை அடைவதற்காக, வெவ்வேறு தெய்வங்களை வழிபடுவதற்கு முன் கணபதியை வழிபட்டுத் தான் மற்ற தெய்வங்களை வழிபட வேண்டும். முதலில் கணபதியை வழிபட்டு, வெவ்வேறு பயன்களின் பொருட்டு வெவ்வேறு தெய்வங்களை தனித்தனியாக வழிபடுவதைக் காட்டிலும், கணபதியின் வழிபாட்டினால் மற்ற தெய்வங்களை நாடாமலேயே எல்லா நன்மைகளையும் அடையலாம்.

ஆதலால் கணபதி வழிபாடு மிக உயர்ந்தது. பராசர ஸ்ம்ருதியிலும் கலியுகத்தில் மனிதன் வழிபட வேண்டிய தெய்வம் கணபதி தான் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாரத தேசத்தில் கணபதியின் பெயரால் விளங்கும் கணபதி அக்ரஹாரத்தில் அகஸ்த்ய முனிவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு, ஸ்ரீ ராமநாத வாத்தியார் முயற்சியால் நன்கு பராமரிக்கப்பட்டு, பக்தர்களின் அபீஷ்டங்களை வாரி வழங்கும் ஸ்ரீ மஹா கணபதியின் அருளால் யாவரும் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று இன்புற்று வாழ ஸ்ரீ மஹா கணபதியை வேண்டுகிறோம்.

எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள்

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்—அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன் தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:
ஸ்ரீ மஹாகணபதயே நம:

முகவுரை

திருவாக்கும் செய்கருமங் கை கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங் கை.

ஸுலபமாகப் பல பாபங்கள் சேரக் கூடிய இக்கலியுகத்தில் ஸகல பாபங்களையும் போக்கடிக்கக் கூடியது பகவானுடைய நாம தோத்திரங்களாகும். இது அறிந்தே ஷண்மத ஸ்தாபகரான ஸ்ரீ ஆதிசங்கரரும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் பகவான் பேரில் நிறைய தோத்திரங்கள் செய்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் தற்காலம் இருக்கும் சிரம நிலையில் தெரிந்து கொள்வது, சொல்லித் தருவது அரிதாகி வருகிறது.

இந்த ஆபத்துதாரண மஹா மந்த்ர ஜபத்தில் பல க்ரந்தங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள ச்லோகங்கள் இருக்கின்றன. பயத்தைப் போக்கக் கூடியது; ஸர்வ உபத்ரவங்களையும் நாசம் செய்யக் கூடியது; பிறவிப் பிணியை நீக்கக் கூடியது; மனத்திற்கு ஆனந்தம் தரக் கூடியது; வீட்டிற்கும் நாட்டிற்கும் ஸர்வ க்ஷேமத்தையும் அளிக்கக் கூடியது; இப்படியாக பல மஹா மந்த்ர ச்லோகங்கள் இருக்கின்றன.

இந்த ச்லோகங்களை, நம்முடைய குழந்தைகளுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பது மிக அவசியமாகும். சொல்லிக் கொடுப்பதை விட நாமே மாலையில் பகவத் ஸந்நிதானத்தில் உட்கார்ந்து சொன்னால் குழந்தை

களும் நம்முடன் சேர்ந்து உட்கார்ந்து சொல்லிச் சொல்லி இவற்றைச் சொல்வது அவர்களுக்குப் பழக்கமும் வழக்கமும் ஆகிவிடும்.

அறிவு வளர்ச்சிக்கு மனத்தை ஒருமுகப்படுத்துதல் ஒன்று தான் ஒரே வழி. இந்த ச்லோகங்களைச் சொல்லி வருவதன் மூலம் மனம் ஒருமுகப்படும். நமது அறிவும், உணர்ச்சியும் நல்லமுறையில் பண்படும். இதனால் நமக்கும், நாட்டிற்கும் நன்மை உண்டாகும்.

இந்த ஸூக்ஷ்மம் அறிந்தே இந்த ஆபத்துத்தாரண மகா மந்த்ரங்களை கிராமக் குழந்தைகளை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு ஒரு மண்டலம்-கார்த்திகை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து தை மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை வரை 45 நாட்கள், வாக்கினை வளப்படுத்துகிற, கல்வி, பொருட்செல்வம் இரண்டினையும் தந்து, நாம் செய்யும் காரியத்திற்கு இடையூறாக வருவனவற்றை நீக்கி, நமக்கு வெற்றி யளிக்கிற ஸ்ரீ மஹாகணபதி ஸந்நிதானத் தில் ஜபம் செய்வது வழக்கம்.

ஸ்ரீமஹாகணபதி ஆலயத்திற்கு வருகிற பெரியவர்கள் முதலில் ஸங்கல்பம் செய்து கொண்டு இந்த ஜபத்தை ஆரம் பிப்பார்கள். 'கணானாந்த்வா'' என்ற மந்த்ரத்தை முதலில் 16 தடவை சொல்லி ''ஆபதாம் அபஹர்தாரம்-நமாம்யஹம்'' என்கிற முதல் ச்லோகத்தை 366 தடவைகள் சொல்வது வழக்கம். இடையில் வந்து வந்து சேருகிறவர்கள், அவர் களுடன் கூடச் சேர்ந்து சொல்லத் தொடங்குவார்கள். 366 தடவைகள் சொல்வதற்குள் அநேகமாக கிராமத்திலுள்ள குழந்தைகள் பெரியவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்து விடு வார்கள். எல்லோருமாக மற்ற ச்லோகங்களை நான்கு நான்கு தடவைகள் சொல்வார்கள். முடிவிலும் ''கணானாந்த்வா'' என்ற மந்த்ரத்தை 16 தடவைகள்

சொல்லி, ஜபத்தை பூர்த்தி செய்வார்கள். இந்தப் பழக்கம் எங்கள் கிராமத்தில் பல நூற்றாண்டுகளாக அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது.

நாம் தினந்தோறுமே, மாலையில் பகவானிடம் தீபத்தை ஏற்றி வைத்துவிட்டு குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு குடும்பக் கூட்டுவழிபாடாக இந்த ஜப பாராயணம் செய்யலாம். நடுவில் வரும் சில வேத மந்த்ரங்களை ஸ்வரம் தெரிந்து அனுஷ்டிப்பது நல்லது. ஸ்வரம் தெரியாதவர்கள் அவற்றை விட்டுவிட்டு, மற்றவைகளைச் சொன்னால் போதும். பலன் பூரணமாக உண்டு. ஸகல நன்மைகளும் உண்டாகும்.

ஸ்ரீ. ஜி. ராமநாதவாத்தியார்
வடக்குத் தெரு,
கணபதி அக்ரஹாரம் (அஞ்சல்)
தஞ்சை ஜில்லா 614202.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்-தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— கபில தேவ நாயனார்

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ மஹாகணபதயே நம:



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

— திருமந்திரம்

பதிப்புரை

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்காவைச் சேர்ந்த கணபதி அக்ரகாரம், பஞ்சநதீச்வர க்ஷேத்திரமாகிய திருவையாறில் இருந்து கும்பகோணம் செல்லும் பேருந்து வழித்தடத்தில் உள்ளது. இக் கிராம மண்ணின் மடியிலே பிறந்து விளையாடி, வளர்ந்து மகிழ்ந்தவர்கள் நாங்கள். இக் கிராமத்தின் தென்பக்கம் பொன்னிநதி—காவேரி பாய்கிறது. வடபக்கம் மன்னியாறும், கொள்ளிடமும் ஓடுகிறது. இடையில் அமைந்த நீர்வளமிக்க இக்கிராமத்தில் கும்பமுனி அகத்தியரால் பிரதிஷ்டை செய்யப்பெற்றவரும், கௌதும மகரிஷியால் பூஜிக்கப் பெற்றவருமான ஸ்ரீ மஹாகணபதி இன்றைக்கும் தன்னை அண்டியவர்களுக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் வழங்கி அருள் பாலித்து வருகிறார்.

இவரது ஆலய பிரும்மோத்ஸவம், ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் விநாயக சதுர்த்தியை யொட்டி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மண்டலாபிஷேகம் என்பதாக கார்த்திகை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை முதல் தை மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை—45 நாட்கள் மாலையில் ஸ்ரீ மஹா கணபதிக்கு அபிஷேகம் செய்து சுண்டல் நிவேதனமளித்து தீபாராதனை செய்வார்கள். அப்போது கிராமத்துக் குழந்தைகளும், பெரியவர்களும், ஆபதுத்தாரண மஹா மந்த்ரத்தை ஜபம் செய்வார்கள்.

இதன் பயனை யாவரும் பெற வேண்டி, இந்நூலை தமிழில் அச்சிட வேண்டும் என்பதாக தமிழக அரசு துணைச் செயலாளர்—தமிழ்நாடு சட்டப் பேரவை விவாதப் பதிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ள எங்கள் டிரஸ்டின் தலைவர் திரு ஜி. எஸ். அனந்தநாராயணன் விரும்பினார். எங்கள் டிரஸ்டின் நிர்வாகக் குழு உறுப்பினராகிய மஹிந்த்ரா அண்ட் மஹிந்த்ரா லிமிடெட் கம்பெனியில், சென்னையில் மெட்டீரியல் கண்ட்ரோல் பர்ச்சேஸ் எக்ஸிக்யூடிவாக இருந்து பணியாற்றிவரும், திரு ஜி. எஸ். சேதுராமன் அவர்களுக்கும் எனக்கும் இது உடன்பாடாக இருந்தது.

கிரந்தத்தில் உள்ள இந்நூலை தமிழில் அச்சிடும்போது "முதலில் ச்லோகங்களை அவற்றின் பொருளுடன் சுத்தமான உச்சரிப்புக்கேற்ற எண் குறிப்புகளுடன் அச்சிடலாம்; இறுதியில் ஸம்ஸ்க்ருத நாகர எழுத்தில் எல்லா ச்லோகங்களையும் அச்சிடலாம்" என்கிற அறிவுரையை வழங்கியவர் எங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே பெருமை தேடித் தந்திருக்கிற மஹாமஹோபாத்யாய எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் பெயரில், சென்னையில் அமைந்துள்ள

குப்புஸ்வாமி சாஸ்திரிகள் ஆராய்ச்சி நிலையத்தின்' இயக்கு னராகப் பணிபுரிந்துவரும் டாக்டர் (மிஸ்) எஸ். எஸ். ஜானகி எம். ஏ., எம். லிட்., பி. எச்டி., ஆவார்கள். அவர்களோடு சேர்ந்து பணியாற்றிவரும் அன்பர் திரு. ஏ. வி. நாகராஜ சர்மா-ஓய்வு பெற்ற ஸம்ஸ்கிருத பேராசிரியர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி-அவர்கள் இயக்குனரின் கருத்திற் கிணங்க இந் நூலை எங்களுக்கு எழுதித் தந்து, அச்சிடும் போது பிழைத்திருத்தமும் செய்து கொடுத்துள்ளார்கள். இவர் கள் இருவருக்கும் நாங்கள் எங்களது உழுவலன்பு நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

எங்களைப்போல் கிராமத்தை விட்டு வெளிவராது, கிராமத்திலேயே தங்கியிருந்து, ஸ்ரீ மஹாகணபதிக்கு ஸதா காலமும் திருத்தொண்டு செய்து வருகிற பிரஹ்மஸ்ரீ ராம நாத[வாத்யார் அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்க இந்நூலுக்கு முகவுரை வழங்க முன் வந்தது நம்முடைய புண்ணியமாகும். குருசரணமாக விளங்கும் அவரது பொன் னார் திருவடிகளுக்கு இந்நூலை ஸமர்ப்பணம் செய்கிறோம்

எம். கிருஷ்ணமூர்த்தி
(பண்டாரி மெட்டல்ஸ் & அல்லாய்ஸ்
பிரைவேட் லிமிடெட், சென்னை-2)

காரியதரிசி

நெ. 11 அரிசிக்காரன் தெரு,
மயிலை, சென்னை-600 004.

ஸ்ரீ. எஸ். சேஷு அய்யர்
மெமோரியல் சாரிட்டபிள்
டிரஸ்ட்.

சொர்ணவிழா வெளியீடு 2

(குறிப்புரை)

இப்பதிப்பில் கும்பகோணம் பிரும்மஸ்ரீ எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள் எழுதி வழங்கியுள்ள ஆசியுரையும், ஆபதுத்தாரண மஹா மந்த்ர ஜபத்தில் வரும் வேத மந்திரங்களின் விளக்கமும் இடம் பெற்றுள்ளன.

பிரும்மஸ்ரீ ஜி ராமநாதவாத்யார் பற்றி எங்கள் டிரஸ்டின் தலைவர் சிறு குறிப்பு ஒன்றை எழுதியுள்ளார்.

ஸ்ரீ மஹாகணபதி ஸ்தோத்திரங்கள் சில சேர்க்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு அன்பர் ஏ. வி. நாகராஜ சர்மா அவர்கள்தான் உரை எழுதித் தந்துள்ளார்கள்.

பிரும்மஸ்ரீ எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களுக்கும், திரு. ஏ. வி. நாகராஜ சர்மா அவர்களுக்கும் இப்பதிப்பை நல்லமுறையில் அச்சிட்டுக்கொடுத்துள்ள ஸ்ரீ ராகவஸிம்ஹம் பிரஸ் உரிமையாளர் பிரும்மஸ்ரீ டி. சீனிவாசன் அவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேதி 7—8—1990
சென்னை-600 004.

எம். கிருஷ்ணமூர்த்தி



பிரும்ம ஸ்ரீ G ராமநாதவாத்யாரும்
பார்ஸான் ஸ்ரீ. G. S. ஆதிசேஷன் அவர்களும்

உ

ஸ்ரீ மஹா கணபதியும்

திருமதி ஜி. ராமநாத வாத்யாரும்

காலைப் பிடித்தேன் கணபதி
 நின்பதம் கண்ணிலொற்றி
நூலைப் பலபலவாகச்
 சமைத்து நொடிப் பொழுதும்
வேலைத் தவறு நிகழாது
 நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின்
 நிறுத்தல் குறியெனக்கே. (பாரதி)

''ஸ்ரீ மஹாகணபதி தமிழ்நாட்டைக் சேர்ந்த கடவுளா? வடநாட்டில் இருந்து வந்தவரா?'' எனச் சென்னையில் ஓர் அன்பர் என்னிடம் கேட்டார். நான் தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, கணபதி அக்ரகாரத்தைச் சேர்ந்தவன் என்பது அவருக்குத் தெரியும்,

'நரசிம்ம பல்லவனின் தானைத் தளபதியான பரஞ்சோதி வாதாபிக் கோட்டையை முற்றுகையிட்டு சாளுக்கிய மன்னன் புலிக்கேசியைத் தோற்கடித்து வெற்றியுடன் திரும்புகையில் அங்கிருந்து எடுத்துவரப்பட்டவர்தான் கணபதி. கணபதி தமிழகம் வந்தது பல்லவர் காலத்தில்தான்' என்பதாக சில அரசியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

வேறு சிலர், 'வரலாற்று ஆசிரியர்கள் இதுபோன்று சொல்லியிருப்பது வெறும் கற்பனை தான். இதற்குச் சான்று எதுவும் இல்லை, கற்பனை உண்மையாகாது' என்கின்றனர்.

பிற்காலத்தில் சிறுத்தொண்ட நாயனாராக விளங்கிய பரஞ்சோதிதான் கணபதியைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவர் என்றால், தொண்டர் பெருமை கூற வந்த சேக்கிழார் பெரியபுராணத்தில் அதனைச் சொல்லாமல் விட்டிருப்பதற்கு நியாயம் இல்லை.

வாதாபிக் கோட்டையிலிருந்து விநாயகரைப் பரஞ்சோதி கொண்டு வந்தார் என்றே கொண்டாலும் அதற்கு முன்பு தமிழகத்தில் விநாயகர் வழிபாடு இருந்ததில்லை எனச் சொல்ல முற்படுவதும் சரியாக இராது.

பிள்ளையாருக்குப் பிடித்த நைவேத்தியம் மோதகம் பழந்தமிழ் இலக்கியங்களில் இது 'கவவு' என்ற பெயரால் குறிக்கப் பெறுகிறது. இந்தப் பணியாரம் செய்யும் வகையும் தமிழ்நாட்டினருக்கன்றி வேறு யாருக்கும் தெரியாது. இதனாலும் பிள்ளையார் தமிழ்நாட்டுக் கடவுள்தான் என்பது துணியக் கூடுமே' என்பார், திரு. ச. தண்டபாணி தேசிகர். இவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய மாணவர். அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். திருவாவடுதுறை ஆதீன மஹாவித்துவானாகவும் இருந்தவர். அந்த ஆதீனத்தின் சார்பில் அவர் எழுதி வெளியிட்டுள்ள 'கணபதி' என்ற ஆராய்ச்சி நூலில் பல அரிய செய்திகள் உள்ளன.

* * *

சைவமும், தமிழும் தழைத்தோங்க வைத்த சீகாழிப் பிள்ளையான திருஞானசம்பந்தர் தோணியப்பரையே, 'கரியின் மாமுக முடைய கணபதி தாதை' எனத் தம் தேவாரத்தில் குறிப்பிடுவார்.

* * *

பசும்பொன் தேவர் மாவட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்திலிருக்கும் குடவரைக் கோவில் மிகப்பழமையானது. அங்குள்ள பிள்ளையார் சிற்பமும் கல்வெட்டும் அவர் வாதாபி பிள்ளையாருக்கும் பல நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பதற்குச் சான்றாக உள்ளன.

தமிழ்ப் பேராசிரியரும், இலக்கியத் திறனாய்வாளருமான திரு. மு. அருணாசலம் சங்க காலத்திலேயே பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் இருந்துள்ளது என்கிறார். அதற்குச் சான்றாக எருக்கினாலான தெய்வத்தை மக்கள் வழிபட்டனர் என வரும் குறிப்பை எடுத்துக் காட்டுகிறார். எருக்கினாலான அந்த தெய்வம் பிள்ளையாராகத்தான் இருக்க முடியும்.

'வெள்ளெருக்கம் வேரில் பிள்ளையார் செய்து வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளது' என டாக்டர் திரு. இரா. நாகசாமி குறிப்பிடுகிறார். இவர் தொல்பொருள்துறை இயக்குனராக இருந்தவர்.

கணபதி அக்ரகாரத்தில் அகஸ்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கௌதம முனிவரால் துர்பிக்ஷம் நீங்க பூஜிக்கப்பட்டு தன்னை அண்டினவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் அருளிவரும் ஸ்ரீ மஹாகணபதிக்கு கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தொண்டாற்றி வருபவர் ஸ்ரீ ஜி. ராமநாத வாத்பார்.

இவரது தந்தை பெயர் ஸ்ரீ கணேச வாத்யார், தம் குல ஆசாரப்படியான ஷட்கர்மாவையும் கடைசி வரையில் செய்து கொண்டு, ஈசுவர பக்தியுடன் வாழ்ந்தவர். தாயார் பெயர்

யோகாம்பாள். அந்த தம்பதிகள் சேது யாத்திரை செய்து வந்த பிறகு ஸ்ரீ ராமநாத ஸ்வாமி அநுக்கிரகத்தால் இவர் பிறந்ததால் இவருக்கு ராமநாதன் எனப் பெயர் வைத்தார்கள். இவர்களது குடும்பத்திற்கு திருப்பதி ஸ்ரீ வெங்கட்ரமண ஸ்வாமி குல தெய்வம். அதனால் இவரது சர்மா ஸ்ரீ வெங்கடேசுவரன் என்பதாகும்.

''ராமநாத வாத்யார் பெரிய வித்வான் இல்லை. மிகக் குறைந்த படிப்பு உடைவர்தான்'' என்று சொன்னால் யாரும் நம்பப் போவதில்லை. இவரது தந்தையார் இவருக்கு 7ஆவது வயதில் பிரம்மோபதேசம் செய்து வைத்தார். அது முதல் தம்முடைய 20ஆம் வயது வரை இவருடைய மூத்த மாமா ஈச்சங்குடி ஸ்ரீ கணபதி சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம், அவருடைய குமாரர் ஸ்ரீ சீதாராமனுடன் எஜுர் வேதம் கிரமாந்தம் அத்தியயனம் செய்து பூர்த்தி பண்ணியிருக்கிறார்.

இவருக்கு மாமாவாகவும் குருவாகவும் அமைந்த ஈச்சங்குடி ஸ்ரீ கணபதி சுப்பிரமணிய சாஸ்திரிகளை 'தர்மபுத்ரர்' என்றே சொல்லலாம். தினமும் இரவு ஒரு மணி நேரம் தன் வீட்டுத் திண்ணையில் பிரதிபிரயோஜனத்தை எதிர் பாராமல் ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் ராமாயணம் ஆகியவற்றைத் திருப்பித் திருப்பி பிரவசனம் செய்து வந்திருக்கிறார். அவரோடு பல வருஷ காலம் இவர் இருந்து வந்த காரணத்தால் இவருக்கும் ஸ்ரீமத் பாகவத, ராமாயணத்தில் அதிகமான ஈடுபாடு உண்டு. 'இப்போதும் கூட வியாக்கியானத்துடன் ஸ்ரீமத் பாகவதத்தை தினமும் சிலநேரமாவது பார்த்தால்தான் என் மனதுக்குச் சாந்தி ஏற்படுகிறது' என்பார் இவர்.

இவருடைய மூன்றாவது மாமா ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள் மன்னார்குடி ஸ்கூலில் சமஸ்கிருத பண்டிதராக இருந்தார். அவர் விடுமுறைக்கு வரும்போதெல்லாம் இவர் அவரிடம் ரகுவம்சம், குமாரசம்பவம் போன்ற காவியங்களைப் பல வருஷங்கள் படித்திருக்கிறார்.

கணபதி அக்ரகாரத்திற்கு வந்த பிறகும் ரெங்கநாதபுரம் மஹாவித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளிடம் காவியம் மாகம் 6 ஸர்கம், மேக ஸந்தேசம் 2 ஸர்கம், கிராதார்ஜுனீயம் 4 ஸர்கம் வாசித்திருக்கிறார்.

ஆண்டாள்நல்லூர் வேதாந்த பாடசாலையிலிருந்து கணபதி அக்ரகாரம் வந்து சில வருடங்கள் தங்கிய வரகூர் பாஷ்ய பாலஜ்ருஸ்மிருதிபூஷண ஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகளிடம் சம்பு முதலிய காவியங்களை மூன்று வருஷம் படித்திருக்கிறார். ஸ்ரீகாஞ்சி மடத்து வித்வான் ஸ்ரீ ராமசாமி சர்மா கணபதி அக்ரகாரத்திலேயே 12 வருஷங்கள் தங்கியிருந்தபோது அவரிடம் சில சம்புகள், சில நாடகங்கள், தர்க்க ஸங்கிரஹம், நீலகண்ட பிரகாசிகை, வேதாந்த பரிபாஷை, கீதா பாஷ்யம் மற்றும் சில பிரகரண கிரந்தங்களையும் படித்திருக்கிறார்.

கணபதி அக்ரகாரம் பெரிய கிராமம். சிவ, விஷ்ணு, கணபதி, கிராம தேவதைகள் உள்ள காவேரி தீரம். மூன்று ஸ்னான கட்டங்களிலும் மடம் உண்டு. பலர் மடி வைத்துக் கொண்டு பிராதஸ்னானம் செய்து மடத்தில் ஜபம் செய்வார்கள். அவற்றில் கீழத் துறையிலுள்ள மடம் பெரிது மாடிக் கட்டிடம்—மடத்தைச் சுற்றி நந்தனவனம்—பல புஷ்ப விருக்ஷங்கள்—நல்ல தீர்த்தமுள்ள கிணறு போன்ற வசதியாவும் இருந்ததால் கிராமத்திற்கு வரும் சன்யாஸிகள் பலரும் கீழத்துறை மடத்தில் தங்குவார்கள். சாதுர்மாஸ்ய, வியாஸ

III

பூஜைகள் நடைபெறும். சங்கர ஜயந்தி உத்சவம் கொண்டாடப்படும். சங்கர ஜயந்தி சமயத்திலும், சாதுர்மாஸ்ய சமயத்திலும் பல வித்வான்கள் கிராமத்திற்கு வருவார்கள். அவர்களது வாக்யார்த்தம், உபந்நியாசங்கள் முதலிய பலவற்றையும் இவர் கேட்டிருக்கிறார்.

மஹாதானபுரத்திலிருந்து ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் கணபதி அக்ரகாரம் வந்து தங்கியிருந்த 5 வருஷ காலத்தில் அவரிடமே இவர் சாந்திபுரஸ்ஸரமாக பாஷ்யம் அப்யஸித்திருக்கிறார்.

கிராம கீழத்துறை மடத்தில் வந்து தங்கியிருந்த ஸ்ரீ கிருஷ்ணானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், பழமாநேரி வாஸ தேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆகிய பிரம்மநிஷ்டர்களுடன் பழகி அவர்களது அருள்மொழிகளைக் கேட்டிருக்கிறார்.

இந்த வயதிலும் கூட தொடர்ந்து பாகவத புராணங்களை வியாக்கியானத்துடன் பார்த்து வருகிறார். இருந்தும் நீங்கள் அவரிடம். ''என்ன படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டுப் பாருங்கள்.

''வியாகரணம், தர்க்கம், மீமாம்ஸை, ஸாகித்யம் முதலிய நாலு சாஸ்திரங்களும் தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். மேற்படி நான்கில் ஒரு சாஸ்திரம் கூட நான் வாசித்து சிரோமணி பட்டம் பெறவில்லை. ஆகையால் பெரிய சாஸ்திர ஞானம் எனக்கு இல்லை. கொஞ்சம் ஸம்ஸ்கிருத ஞானம் உண்டு. வேதாத்யயனம் செய்திருக்கிறேன்'' என மிக அடக்கத்துடன் சொல்லிக் கொள்வார்.

ஸ்ரீ காஞ்சி பெரியவர் பல தடவைகள் கணபதி அக்ரகாரம் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்த சமயங்களில் எல்லாம்

விநாயகர் ஆலயத்தை யொட்டியுள்ள பாஷ்ய மண்டபத்தில் அமர்ந்து பாஷ்ய பாடம் சொல்வார்கள். அவற்றை இவர் சிரத்தையோடு கேட்டிருக்கிறார். ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் இரு முறைகள் அவராகவே ஸ்ரீராமநாத வாத்யார் வீட்டிற்கு வந்து பத்து நிமிஷங்களுக்கு மேல் தங்கி, "உன் ஜென்மா வீணாகாது" எனச் சொல்லி இவரை வாழ்த்தியிருக்கிறார். கணபதி அக்ரகாரத்தில் எட்டு நாட்கள் வேத தர்ம சாஸ்திர ஸதஸ் நடந்த ஸமயத்திலும், "ராமநாதனுக்கு க்ஷேமம் உண்டாக ஆசீர்வாதம் செய்யுங்கள்" என ஸதஸுக்கு வந்திருந்த பெரியோர்களையும் இவருக்கு ஆசீர்வாதம் செய்யச் சொல்லியிருக்கிறார் என்றால் இதைவிட பெரிய பாக்கியம் இவருக்கு இந்த ஜென்மாவில் வேறு என்ன வேண்டும்?

ஸ்ரீராமநாத வாத்யார் தமக்கென தம் வாழ்நாளில் எந்த உத்தியோகத்தையும், பதவியையும் நாடிச் செல்லவில்லையே தவிர இவர் மிகுந்த நிர்வாகத் திறமை உடையவர்.

கணபதி அக்ரகாரத்திலுள்ள சிவன்கோவில், பெருமாள் கோவில், ஸ்ரீமஹாகணபதி கோவில் ஆகிய மூன்று கோவில்களுக்கும், பல பக்தர்களின் உதவியைக் கொண்டு அவசியமான திருப்பணிகளைச் செய்தும், கோபுரம் முதற்கொண்டு வர்ணம் வைத்தும் இவர் கும்பாபிஷேகம் செய்து வைத்திருக்கிறார்.

60 வருஷங்களுக்கு முன்வரை கணபதி அக்ரகாரம் ஸ்ரீ மஹாகணபதி கோவில் மிகப் பழைமையாக இருந்தது. மூலவருக்கு வெள்ளியில் தும்பிக்கை மட்டும் தான் உண்டு. இவரது தகப்பனார் முயற்சியால் மூலவருக்கு மற்றுமுள்ள வெள்ளிக் கவசங்கள் பூராவும் நடந்தது. இவரும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு, பலரிடம் சொல்லி, உத்ஸவருக்கு வெள்ளிக்கவசம், திருவாசி பீட வகையராவும், தங்க ஆபரணங்கள், கல் வைத்த

பதக்கங்கள், வெள்ளியில் மூஞ்சூர் வாகனம், மூலவருக்கு கல் வைத்த அபய, வரத ஹஸ்தங்கள் ஆகியவற்றைச் செய்துவித்திருக்கிறார்.

ஸ்ரீ மஹாகணபதி கோவில் பிரகாரச் சுவறுகளை உயர்த்தியது, கோவில் பூராவும் இரும்பு மரக்கதவுகள் அடைப்புகள் பழைய வாகனங்கள் ரிப்பேர், புதிய வாகனங்கள், விமானங்கள், வாகன மண்டபம், யாகசாலை, துவஜஸ்தம்பம், சலவைக்கல் சுவற்றில் பதித்தது, புஷ்பத் தோட்டம் மின்சார விளக்குகள், கண்ணாடிப் ப்ரபை, கண்ணாடிப் பல்லக்கு, அச்சுத்தேர்—இப்படிக் கோவிலின் பழமை கெடாமல் அதனைப் புதுப்பித்து பராமரித்து வர இவர் மூலம் நடந்திருக்கும் காரியங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

''ஒருவர் ஒரு நல்ல காரியம் செய்ய முன்வந்தால் பத்து பேர் பத்துவிதமாகத் தூஷிப்பார்களே, அவற்றை யெல்லாம் சகித்துக் கொண்டு உங்களால் எப்படிச் செயல்பட முடிகிறது?'' என்று ஒரு சமயம் நான் அவரிடம் கேட்டிருக்கிறேன்.

''யாவரையும் ஏமாற்றலாம். உள்ளிருக்கும் ஆத்மாவை ஏமாற்ற முடியாது. ஸ்ரீ மஹாகணபதிக்கு எல்லாம் தெரியும். அதுபோதும். நல்லது கெட்டதை யெல்லாம் கேட்டுக் கொண்டுதான் வீட்டிலும் இருக்க வேண்டியிருக்கிறது, அதுபோல் பொதுக் காரியங்களிலும் பேசுவார்கள் என்று நினைந்து மறந்து விடுவேன்'' என்றார் ஸ்ரீ ராமநாத வாத்யார்,

இத்தகைய அரிய மனப்பண்புடைய பெரியவரால் ஸ்ரீ மஹாகணபதி கோவில் நடுமண்டப நான்கு பக்க பலகணிகளிலும் அத்தி மரத்தில் செய்து வர்ணம் கொடுத்து, கண்ணாடிக் கல் பதித்து அமைக்கப் பெற்றுள்ள பல மூர்த்திகள் இவருடைய கலையுணர்வை வெளிப்படுத்தும்.

கடவுளுக்குத் தொண்டு செய்வதோடன்றி, அணுக்கத் தொண்டர்களுக்கும் நாம் நலம் செய்ய வேண்டுமென பெருமாள்கோவில் பட்டாசாரியார் வீடு, ஸ்ரீ மஹாகணபதி கோவில் சிவாசாரியார் வீடு ஆகியவற்றையும் இவர் புதுப்பித்துக் கட்டிக் கொடுத்திருப்பது இவருடைய மனிதாபிமானச் செயல்களுக்குச் சான்றாகும்.

சிறுவர்களோடும், பெரியவர்களோடும், தாய்மார்களோடும், பலதரப்பட்ட தொழிலாளர்களோடும் இவர் நேரிடையாக, எளிமையாகப் பேசிப் பழகும் முறையே இவரது உள்ளத் தூய்மைக்கும், அன்புக்கும் எடுத்துக் காட்டாகும்.

இந்த நூற்றாண்டில் ஸ்ரீ ராமநாதவாத்யார் கணபதி அக்ரஹாரம், ஸ்ரீ மஹாகணபதி கோவிலுக்கு ஸ்திரமாக பல ஆண்டுகள் இருக்கக்கூடியவைகளைச் செய்வதிலேயே தம் ஆயுளைக் கழித்து வந்திருக்கிறார். அவற்றைப் பராமரித்து வந்தால் போதும், பல வருஷங்களுக்கு புதியதாக எதுவும் செய்ய வேண்டியது அதிகம் இருக்காது.

இவர் இத்தனைக்கும் பெரிய தனவந்தர் இல்லை. தன்னால் முடிந்த அளவு சொந்தமாகவும் செலவு செய்து வந்திருக்கிறார். கிராமத்திலேயே இவர் இருப்பதால் வெளியூரில் உள்ளவர்கள் இவர்பால் மதிப்பும், நம்பிக்கையும் கொண்டு இவர் மேற்கொள்கிற திருப்பணிகளுக்கு உதவி வந்திருக்கிறார்கள். இவர் மூலம் இன்று ஓரளவு தினசரி பூஜைகளுக்கும், உத்ஸவம் முதலியவைகளுக்கும் வெளியில் போய் சாமான்கள் தேடாமல் கோவிலுக்கு வேண்டியவைகள் பூர்த்தியாக உள்ளன என்றால்—இவை எல்லாம் அந்த ஸ்ரீ மஹாகணபதியின் செயல்தான். இது ஸ்ரீ ராமநாதவாத்யாருக்கும், உதவியவர்களுக்கும், கோவிலில் ஈடுபட்டவர்களுக்கும் நன்கு தெரியும்.

XXII

அரசுத் துறையில் பணியாற்றி, ஓய்வு பெற்று கிராமத்தில் வந்து தங்கிய ஸ்ரீ ஜி. எஸ். சுவாமிநாதையர் முன்பு ஸ்ரீ மஹாகணபதிக்கு கோடி அர்ச்சனை நடைபெறச் செய்தார். இன்று அவரது குமாரராகிய பார்சான் திரு. ஆதி சேஷன் அவர்கள் ஸ்ரீமஹாகணபதி ஆலயத்திற்கு எதிரிலேயே நல்ல பல காரியங்கள் நடைபெற ஓர் அழகான மண்டபம் கட்டி அதற்கு ஸ்ரீ ராமநாத வாத்யார் மண்டபம் எனப் பெய ரிட்டிருக்கிறார் என்றால் ஸ்ரீராமநாத வாத்யார் செய்து வரும் தெய்வத் திருப்பணியை யார்தான் மறக்க முடியும்?

ஆதிகாலத்திலிருந்தே கணபதி அக்ரகாரத்தில் விநாயக சதுர்த்தி உத்ஸவம் வேதபாராயணத்துடன் நடைபெற்று வந்திருக்கிறது. ஸ்ரீராமநாத வாத்யாரும் அந்த தர்மத்தை விடாமல் பல வருஷங்களாக மூன்று வேதபாராயணம், திரு முறை பாராயணம் ஆகியவற்றுடன் விநாயக சதுர்த்தி உத்ஸ வத்தை நடத்திக் கொண்டு வருகிறார்.

ஸ்ரீ ராமநாத வாத்யாருக்கு இப்போது வயது 79 இருக் கலாம். ஊரில் இவருக்கு ஒரு வீடு அப்பா காலத்தில் இருந் தது போலவே இருக்கிறது. இவரது சாப்பாட்டுக்கும் அப்பா கொஞ்சம் நிலம் விட்டுச் சென்றிருக்கிறார். இவருக்கு ஒரு சகோதரி உண்டு. தம் சகோதரியை இரண்டாவது மாமா ஈச்சங்குடி ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் பிள்ளை திரு லக்ஷ்மீ நாராயணனுக்கு விவாகம் செய்து கொடுத்திருக்கிறார். அவர் கள் சௌகர்யமாக இருக்கிறார்கள் இவரும் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இவரது மனைவி பெயர் தர்மாம் பாள் ஸ்ரீ மஹாகணபதியின் அருளால் இன்றுவரை வீட்டில் இருப்பதுபோலும், குடும்பம் நடத்துவது போலும் இருந்து வருகிறார். இவருக்கு ஸந்ததிகள் உண்டாகவில்லை. கங்கா ஸ்னானம், கயா சிரார்தம் எல்லாம் செய்து வந்திருக்கிறார்,

முப்பது ஆண்டுகளுக்கும் முன்பே பிரதிக்ரகத்தை நிறுத்தி ஆசார, ஆகார நியமத்துடன் இருந்து வருகிறார்.

* * *

கணபதி அக்ரகாரம் ஸ்ரீ மஹாகணபதி ஆலயத்தில் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீராமநாத வாத்யார் ஒண்ணரை ரூபாய் செலவில் இரவு சந்திரோதய காலத்தில் ஸ்ரீ மஹாகணபதிக்கு சங்கஷ்டஹர சதுர்த்தி அபிஷேகம் நடத்த ஆரம்பித்தார். பலவருஷங்களாகத் தொடர்ந்து நடந்து வர மேலும் பலர் அவருடன் சேர்ந்து கொண்டார்கள். தற்போது மாதந்தோறும் ஆயிரத்தைந்நூறு ரூபாய் செலவில் அந்த அபிஷேகம் கணபதிக்கு நடந்து வருகிறது.

ஸர்வ தேவமயஸ் ஸாக்ஷாத்
ஸர்வமங்கள தாயக: ।
மாக க்ருஷ்ண சதுர்த்யாந்து
ப்ராதுர்பூதோ கணாதிப: ॥

என பார்க்கவ புராணத்தில் ஸ்ரீ மஹாகணபதியின் அவதார லீலைகள் சொல்லப் பெற்றுள்ளனவாம். கணபதியைக் குறித்து அங்காரகன் தவம் செய்தான். மாசி மீ க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தியில்தான் அங்காரகனுக்கு கணபதி ப்ரத்யக்ஷமாகி வேண்டிய வரங்களை அளித்தார். 'மாசி மீ க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தியன்று கணபதியை வழிபடுபவர்களுக்கு ஸகல சௌபாக்கியங்களும் பெருக வேண்டுமென அங்காரகன் கணபதியிடம் வரம் கோரிப் பெற்றிருக்கிறான்'' என ஷ புராணத்திலுள்ளது.

இதனால் கணபதி உபாசகர்கள் ஆவணி சுக்ல பக்ஷ சதுர்த்தியைக் கொண்டாடுவது போலவே, ஆவணி மீ க்ருஷ்ண பக்ஷ மஹா ஸ்ங்கஷ்டஹர சதுர்த்தியையும், மாசி மீ க்ருஷ்ண பக்ஷ ஸங்கஷ்டஹர சதுர்த்தியையும் கொண்டாடி வருகிறார்கள்.

ஸ்ரீ ராமநாத வாத்யார் இந்த மூன்று சதுர்த்திகளிலும் ஸ்ரீ மஹா கணபதிக்கு விசேஷமாக ஏகதின லட்சார்ச்சனை, 1008 சங்காபிஷேகம், 1008 கலசாபிஷேகம், விரிவான கணபதி ஹோமம், பிராம்மண ஸந்தர்ப்பணையுடன் ஒவ் வருஷமும் பலவிதமாக மூவாயிரம் ரூபாய்க்கு மேல் செல வில் நடத்தி வருகிறார்.

* • *

இவ்வருஷ (1990) மாசி மீ ஸங்கஷ்டஹர சதுர்த்தி, ஸ்ரீ ராமநாத வாத்யார் ஸ்ரீமஹாகணபதிக்கு ஸங்கஷ்டஹர சதுர்த்தி அபிஷேகம் ஆரம்பித்துக்கொண்டதிலிருந்து 50ஆம் ஆண்டு மாசி ஸங்கஷ்டஹர சதுர்த்தியாக அமைந்ததால் இருபத்திரண்டாயிரம் ரூபாய் செலவில், பல பக்தர்களின் உதவியுடன் இதனை சொர்ண விழாவாகவே நடத்தி னார்.

அன்று காலை (13—2—1990) முதல் ஸ்ரீமஹாகணபதி ஆலயத்தில் கோ பூஜை, கஜ பூஜை, விரிவான முறையில் ஷோடச கணபதி ஹோமம் என ஒவ்வொன்றாக நடை பெற்றன. ஷோடச கணபதிகளாக 16 பிரும்மசாரி பிள்ளை களை உட்கார வைத்தும் பூஜை செய்தார்கள். சுவாஸினி பூஜை நடைபெற்றது. வேத வாத்யம் முழங்க ஸ்ரீ மஹா கணபதிக்கு அபிஷேக தீபாராதனை நடைபெற்றது. மாலை யிலும் வழக்கம்போல் சந்திரோதய காலத்தில் கணபதி ஹோமம், அபிஷேகம், ஸஹஸ்ர நாம அர்ச்சனை ஆகியவை நடைபெற்றன. இரவு முத்துப் பல்லக்கில் சுவாமி புறப்பாடும் நடைபெற்றது.

இந்த சொர்ணவிழா வைபவத்திற்கு நான் கணபதி அக்ரகாரம் போயிருந்தேன். கிராமத்திற்குப் போகும்வரை, 'கணபதி தமிழ்நாட்டைச் சேர்ந்த கடவுளா? வடபுலத்தி லிருந்து வந்தவரா?' என ஸ்ரீ ராமநாத வாத்யாரிடமே கேட்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது.

ரீங்காரமிடும் தேன் வண்டு, ஒரு பூவிலே உட்கார்ந்து தேனை உறிஞ்சத் தொடங்கியவுடன் ஓசை அடங்கிப்போனது போல ஸ்ரீ மஹாகணபதி சந்நிதானத்தை அடைந்தவுடன் ஸ்ரீ ராமநாத வாத்யாரிடம் எதுவும் கேட்கத் தோன்றவில்லை. அவராகச் சொன்னவற்றையே கேட்டுக் கொண்டிருந்தேன். அன்று அவர் சொன்னார்.

''ஸ்ரீ மஹாகணபதியை கபடமில்லாமல் பக்தியுடன் நம்பினவர்களும், உபகாரம் செய்தவர்களும் இந்தியாவில் பல இடங்களிலும், அயல் நாடுகளிலும் பரம சௌகர்யத்துடன் இருக்கிறார்கள்.

ஸர்வ விக்னங்களையும் பக்தர்களுக்கு நிவர்த்தி செய்து, ஸர்வ அபீஷ்டங்களையும் பூர்த்தி செய்து கருணாமூர்த்தியாக இங்கு ஆலயத்தில் பிரத்யக்ஷமாக தர்சனமளிக்கும் ஸ்ரீ மஹாகணபதி தன் சரணத்தில் அனன்யமான பக்தியை எனக்கும், யாவருக்கும் கொடுத்து ரக்ஷிக்கப் பிரார்த்திக்கிறேன்'' எனக் கண்ணீர் மல்கச் சொன்னார்.

அடுத்தகணமே என்னைப் பார்த்து, ''இந்த ஊரில் உங்கள் குடும்பத்தை மலையாளத்தார் வம்சம் என்று சொல்வார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்ரீ சேஷு அய்யர் என்பவர் பாலக்காடு பெருவேம்பாவிலிருந்து இங்கு வந்து குடியேறினார். இந்த ஊர் ஸ்ரீ மஹாகணபதியிடம் விசேஷ பக்தி கொண்டு விநாயக சதுர்த்தி உத்ஸவத்தில் 12-வது நாள் (சஷ்டி) மண்டகப்படி கண்ணாடிப் பல்லக்கு சேவையை நடத்தி வரத் தொடங்கினார். வழிவழியாக நீங்களும் கண்ணாடிப் பல்லக்கு சேவையை இன்றுவரை செய்து வருகிறீர்கள்.

அதுபோலத்தான் கிருஷ்ண வாத்யார் என்பவர் பெரிய மகான். அவருக்குப் பூர்வீகம் வடதேசம். அவர் தென்

IV

நாட்டுக்குத் தீர்த்த யாத்திரையாக வந்த சமயம் கணபதி அக்ரகாரம் வந்தார். இவ்வூரின் அமைப்பைப் பார்த்து சில நாள் தங்கினார். கிராமத்தார்கள் அவருடைய அனுஷ்டானங்களையும், தேஜஸையும் பார்த்து இந்த ஊரிலேயே நிரந்தரமாகத் தங்க வசதி செய்து கொடுத்தார்கள். அவர் இவ்வூரில் இருந்த மஹாகணபதியிடம் மனதைப் பறிகொடுத்தார். வருடா வருடம் நடைபெறும் விநாயக சதுர்த்தி உத்ஸவத்தின் முதல் மண்டகப்படியை அவரே ஏற்றுக்கொண்டு நடத்தி வரவும் தொடங்கினார். அவருக்கு 6 பிள்ளைகள். கடைசிக் காலத்தில் 6 பிள்ளைகளையும் வருஷத்துக்கு ஒருவராக அந்த மண்டகப்படியை நடத்தி வரவும் சொன்னார். சென்ற பத்து வருஷம் முன்வரை அந்தந்த வம்சத்தை சேர்ந்தவர்களே ஆண்டுக்கு ஒருவராக நடத்தி வந்தார்கள். ஷி வம்சத்தின் ஒரு பிள்ளையின் வம்சம்தான் நான். கிருஷ்ணவாத்யாரிலிருந்து நான் 8வது தலைமுறையைச் சேர்ந்தவன். கிருஷ்ண வாத்யாரின் 6 பிள்ளைகளின் வம்சமும் பல பிரிவுகளாக நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல இடங்களில் இருப்பதால் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து ரூ. முப்பத்தையாயிரத்துக்கும் மேல் ஏற்படுத்தி (மேலும் சேரும்) நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஷி மூலதனத்தின் வட்டியைக் கொண்டு பத்து வருஷங்களாகத்தொடர்ந்து விநாயக சதுர்த்தி உத்ஸவத்தின் முதல் மண்டகப்படியை நடத்தி வருகிறோம். இப்போதும் கிருஷ்ண வாத்யார் வம்சத்திலுள்ளவர்கள் இங்கு ஸ்ரீ மஹா கணபதிக்கு முடிந்த அளவு பிரார்த்தனை நடத்தி வருகிறார்கள்'' என்று அவர் சொன்னபோது என் மனதிலிருந்த குழப்பத்துக்கு விடை கிடைத்துவிட்டது போலத் தோன்றியது.

''எல்லாம் ஸ்ரீ மஹாகணபதியின் செயல்தான்.'' என அவர் கையைக் குவித்துக்கொண்டு சுவாமி சந்நதிக்குச் சென்றார். நான் புல்லரித்துப் போனேன்.

இப்படி வந்துகொண்டும், போய்க் கொண்டுமிருக்கிற மனித சமுதாயத்தைச் சேர்ந்த நான், போக்கும் வரவும்

இல்லாது, எங்கும் எப்பொழுதும் நிறைந்திருக்கும் பிரணவ பரப்பிரஹ்ம சொரூபமாகிய ஸ்ரீ மஹாகணபதியின் மூலத்தையா ஆராயத் துணிந்தேன்' என உள்ளம் வெட்கினேன்.

என் நெஞ்சைப் புனிதமாக்கிக் கொள்ளவே, ஸ்ரீ மஹா கணபதியின் திருவடித் தொண்டராகிய ஸ்ரீ ஜி. ராமநாத வாத்யார் சரிதத்தை எழுதியுள்ளேன். இத்தகைய அடியார் களின் பெருமையைத் தானே.

"கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

எனச் சேக்கிழார் சுவாமிகளும் கூறியுள்ளார்கள்.

ஜி. எஸ். அனந்தநாராயணன், எம் ஏ.
(அனந்தன்)
தமிழ்நாடு சட்டமன்ற
துணைச் செயலாளர் (ஓய்வு)

'கணயாரம்'
19, அலுவலர் குடியிருப்பு,
மேத்தா நகர், சென்னை-29.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"
"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடரும் வினைகளே."

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
XIV	10	மோதக	மோதகம்
16	6	சாபதேமே	சாபதோமே
27	3	கர்^{4}மி	க^{4}ர்மி
30	2	யதா^{2}நச்	யதாந:
34	2	து:காஸ்	து^{3}:காஸ்
		பவந்தி	பவந்து
47	17	श्रति	श्रुति
48	14	मम:	नम:
	19	नेत्राय	नेत्रत्रयाय
49	3	वृन्दे:	वृन्दै:
50	6	चपूजा	पंचपूजा
51	11	कण्ठं	कण्टे
54	4	भोता:	भीता:
	7	न्द्राग्नी	विन्द्राग्नी
		गौपौ	गोपौ
57	12	निवृत्यथ	निवृत्यर्थं

உ

ஸ்ரீ மஹாகணபதி தோத்திரங்கள்

''அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்''

—ஸ்ரீ கச்சியப்ப முனிவர்

''எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின் மவுன
நிலைவந் திடநீ செயல் வேண்டும்
கனக்குஞ்செல்வம் நூறுவயது
இவையும் தரநீ கடவாயே''

—பாரதி

''வாக்கு உண்டாம்; நல்ல மனம் உண்டாம்; மா மலராள்
நோக்கு உண்டாம்; மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பு ஆர்திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு''

—ஔவையார்

உ

கணபதி துணை

ஔவையார் அருளிய

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டிஎன் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

—ஃ—

''கணபதி ராயன் அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குண முயர்ந்திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே''

—பாரதி

''ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனி வெண்கோட்டு மதமுகத்துத் தூத்தழல்போல்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழலங்கை
முக்கண் கடாயானை முன்''

—கபிலதேவ நாயனார்

த்4யாயேத் ஸிம்ஹ-க3தம் விநாயகம் அமும்
　　தி3க்-பா3ஹும் ஆத்3யே யுகே
த்ரேதாயாம் து மயூர-வாஹனம் அமும்
　　ஷட்3-பா3ஹுகம் ஸித்3தி4-த3ம் ।
த்3வாபாரே து க3ஜானனம்
　　யுக3-பு4ஜம் ரக்தாங்க3-ராக3ம் விபு4ம்
துர் யே து த்3வி-பு4ஜம் ஸிதாங்க3-
　　ருசிரம் ஸர்வார்த்2-த3ம் ஸர்வதா3 ॥

[ஸூர்யனைப் போல் தொலைவில் ப்ரகாசிக்கும்] அவ்விநாயகனை முதல் யுகமான க்ருதயுகத்தில் எட்டுக்கைகளை உடையவராக ஸிம்ஹத்தின் மீது அமர்ந்திருப்பவராகவும் (ஸிம்ஹத்தின் நடையை யொத்த நடையை உடையவராகவும்)

த்ரேதாயுகத்திலோ (அதனின்றும் மாறுபட்டு) மயில்வாஹனத்தையுடையவராகவும் ஆறுகைகளை உடையவராகவும் வெற்றியைக் கொடுப்பவராகவும் (நினைப்பவைகளை, விரும்பியவற்றைக் கொடுப்பவராகவும், [யோகத்தின் மூலமாக எட்டு ஸித்தி களையும் கொடுப்பவராகவும்]

த்வாபர யுகத்திலோ (மேலும் மாறுபட்டு) யானை முகத்தையுடைய அவரை நான்கு கைகளைக் கொண்டவராகவும், சிவந்த பூச்சுக்களை (உடலை அழகு படுத்தும் த்ரவ்யங்களைக்) கொண்டவராகவும் எங்கும் நிறைந்திருப்பவராகவும்

நான்காவதான (இக்கலி)யுகத்தில் இரண்டு கைகளை உடையவராகவும் வெண்மையான சரீரத்துடன் (மனதிற்கு) இன்பத்தை ஊட்டுபவராக (அழகாக)வும் எப்பொழுதும் எல்லாச் செல்வங்களையும் (புருஷார்த்தங்களையும்) அளிப்பவராகவும் உள்ளவராக த்யானம் செய்யவேண்டும்.

உ

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீ மஹா கணேச பஞ்சரத்னம்

முதா3 கராத்தமோ3தகம் ஸதா3 விமுக்திஸாத4கம்
கலாத4ராவதம்ஸகம் விலாஸிலோகரக்ஷகம் ।
அநாயகைகநாயகம் விநாசிதேப4தை3த்யகம்
நதாசுபா4சுநாசகம் நமாமி தம் விநாயகம் ॥ 1

நதேதராதி3பீ4கரம் நவோதி3தார்க்கபா4ஸ்வரம்
நமத்ஸுராரிநிர்ஜ3ரம் நதாதி4காபது3த்3த4ரம் ।
ஸுரேச்வரம் நிதீ4ச்வரம் க3ஜே3ச்வரம் க3ணேச்வரம்
மஹேச்வரம் தமாச்ரயே பராத்பரம் நிரந்தரம் ॥ 2

---

1. ஸந்தோஷத்தினால் கையில் மோதகத்தை வைத்துக் கொண்டிருப்பவராயும், எப்போதும் மோக்ஷத்தையளிப்பவராயும், சந்த்ரனை சிரஸில் தரித்திருப்பவராயும், விளையாடிக் கொண்டே பக்த ஜனங்களை இரக்ஷிப்பவராயும், நாதனில்லாதவர் களுக்கு ஒப்பற்ற நாயகராயும், கஜாஸுரனை நாசம் செய்தவராயும், அண்டினவர்களின் அசுபங் களை சீக்ரத்தில் நாசம் செய்பவராயுமுள்ள விநாய கரை வணங்குகிறேன்.

2. தன்னை வணங்காதவர்களுக்கு அதிக பயத்தை அளிப்பவரும், அப்போது உதிக்கும் ஸூர்யனைப் போல் காந்தியை உடையவரும், தன்னை வணங்கும் தேவதைகளின் சத்ருக்களான அஸுரர்களை நாசம் செய்பவரும் அண்டினவர்

ஸமஸ்தலோக சங்கரம் நிரஸ்த தை3த்ய குஞ்ஜ3ரம்
தரேதரோத3ரம் வரம் வரேப4வக்த்ரமக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதா3கரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பா4ஸ்வரம் ॥

அகிஞ்சநார்த்திமார்ஜ3நம் சிரந்த நோக்திபா4ஜனம்
புராரிபூர்வநந்த3னம் ஸுராரிகர்வசர்வணம் ।
ப்ரபஞ்சநாசபீ4ஷணம் த4நஞ்ஜயாதி3பூ4ஷணம்
கபோலதா3நவாரணம் ப4ஜே புராணவாரணம் 4

களின் பெரிய ஆபத்துக்களையும் அழிப்பவரும், தேவதைகளுக்கு ஈச்வரரும், நிதிகளுக்கு அதிபரும், கஜாதிபரும் எல்லோருக்கும் மேலானவரும், மஹேச்வரருமான கணாதிபரை எப்போதும் வணங்குகிறேன்.

3. எல்லா உலகத்துக்கும் க்ஷேமத்தை அளிப்பவரும், கஜாஸுரனை அழித்தவரும், பெரிய வயிற்றையுடையவரும், உயர்ந்தவரும், ஐராவதம் போன்ற முகத்தையுடையவரும், நாசமில்லாதவரும், கருணைக் கடலானவரும், பொறுமைக்கு இருப்பிடமானவரும், சந்தோஷத்துக்கு ஆச்ரயமானவரும், வணங்கியவர்களுக்கு கீர்த்தியையும், நல்ல மனதையும் அளிப்பவரும், பிரகாசிக்கிறவருமான கணேசரை வணங்குகிறேன்.

4. அண்டினவர்களின் ஏழ்மையெனும் பீடையைத் தொலைப்பவரும், வேதங்களில் துதிக்கப்படுகிறவரும், த்ரிபுராந்தகனின் மூத்த புதல்வரும், அஸுரர்களின் கர்வத்தை அடக்கினவரும், உலகை

நிதாந்தகாந்தத3ந்தகாந்திமந்தகாந்தகாத்மஜ3ம்
அசிந்த்யருபமந்தஹீந மந்தராயக்ருந்தநம் ।
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகி3நாம்
தமேகத3ந்தமேகமேவ சிந்தயாமி ஸந்ததம் ॥ 5

மஹா3கணேச பஞ்சரத்நமா3தரேண யோங்வஹம்
ப்ரஜ3ல்பதி ப்ரபா4தகே ஹ்ருதி ஸ்மரங் க3ணேச்வரம்।
அரோகதாம் அதோ3ஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயு ரஷ்டபூதிமப்1யுபைதி ஸோசிராத் ॥ 6

நாசம் செய்யவல்ல யமனுக்குப் பயங்கரரும், அர்ஜுனன் முதலியவர்களால் பூஷிக்கப்படுகிற வரும், கபோலத்தில் ஏற்படும் தோஷத்தைப் போக்குபவரும், தொன்மையானவருமான கஜ முகனை பஜிக்கிறேன்.

5. மிகவும் அழகான பற்களின் காந்தியுடைய வரும், பரமேச்வர புத்ரரும், நினைக்கமுடியாத ஸ்வ ரூபத்தை உடைவரும், முடிவில்லாதவரும், இடை யூறுகளை அழிப்பவரும், யோகிகளுடைய ஹ்ருதய குஹையிலேயே எப்போதும் வஸிப்பவருமான அந்த ஏகாந்தரரான விநாயகரொருவரையே எப்போதும் சிந்திக்கிறேன்.

6. எவன் பிரதி தினமும் விடியற்காலையில் பக்தியுடன் ஹ்ருதயத்தில் கணேச்வரனை த்யானம் செய்து மஹா கணேச பஞ்சரத்னத்தைச் சொல்லு வானோ; அவன் ரோகமின்மை, பாபமின்மை, நல்ல கவிதை, நற்புத்ரன், நீண்ட ஆயுள், அஷ்டைச்வர் யங்கள் இவைகளை சீக்ரத்தில் அடைகிறான்.

ஸங்கஷ்ட-நாசனம்

கணேச-ஸ்தோத்ரம்

ஓம்

நாரத உவாச[1]

ப்ரணம்ய சிரஸா தே[3]வம் கௌ[2]ரீபுத்ரம் விநாயகம் ।
ப[4]க்தாவாஸம் ஸ்மரேந்நித்யம் ஆயுஷ்காமோர்த[2]ஸித்[3]த[4]யே ॥

ப்ரத[2]மம் வக்ரதுண்ட[3]ம் தம் ஏகத[3]ந்தம் த்[3]விதீயகம் ।
த்ருதீயம் க்ருஷ்ணபிங்கா[3]க்ஷம் க[3]ஜவக்த்ரம் ச[1]துர்த[2]கம் ॥

லம்போ[3]த[3]ரம் பஞ்ச[1]மம் ச[1] ஷஷ்ட[2]ம் விகடமேவ ச[1] ।
ஸப்தமம் விக்[4]னராஜம் ச[1] தூ[4]ம்ரவர்ணம் ததா[2]ஷ்டமம் ॥

நவமம் பா[3]லச[1]ந்த்[3]ரம் ச[1] த[3]சமம் து விநாயகம் ।
ஏகாத[3]சம் க[3]ணபதிம் த்[3]வாத[3]சம் து க[3]ஜாநநம் ॥

த்[3]வாத[3]சைதாநி நாமாநி த்ரிஸந்த்[4]யம் ய: படே[2]ந் நர: ।
ந ச[1] விக்[4]னப[4]யம் தஸ்ய ஸர்வஸித்[3]தி[4]கரம் பரம் ॥

வித்[3]யார்தீ[2] லப[4]தே வித்[3]யாம் த[4]நார்தீ[2] லப[4]தே த[4]நம் ।
புத்ரார்தீ[2] லப[4]தே புத்ராந் மோக்ஷார்தீ[2] மோக்ஷமாப்நுயாத் ॥

ஜபேத்[3] க[3]ணபதிஸ்தோத்ரம் ஷட்[3]பி[4]ர்மாஸை: ப[2]லம் லபே[4]த் ।
ஸம்வத்ஸரேண ஸித்[3]தி[4]ம் ச[1] லப[4]தே நாத்ர ஸம்சய: ॥

அஷ்டப்[4]யோ ப்[3]ராஹ்மணேப்[4]யச்ச[1] லிகி[2]த்வா ய: ஸமர்பயேத் ।
தஸ்ய வித்[3]யா ப[4]வேத் ஸர்வா க[3]ணேசஸ்ய ப்ரஸாத[3]த: ॥

இதி நாரத-புராணே ஸங்கஷ்ட-நாசனம் நாம
க[3]ணேச-ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

ருண-ஹர-கணேச-ஸ்தோத்ரம்

ஸிந்தூ3ர-வர்ணம் த்3வி-பு4ஜம் க3ணேசம்
லம்போ3த3ரம் பத்3ம-த3லே நிவிஷ்டம் ।
ப்3ரஹ்மாதி3-தே3வை: பரிஸேவ்யமானம்
ஸித்3தை4ர்யுதம் தம் ப்ரணமாமி தேவம் ॥

1. ஸ்ருஷ்ட்யாதௌ3 ப்3ரஹ்மணா ஸம்யக்
பூஜித: ப2ல-ஸித்3த4யே ।
ஸதை3வ பார்வதீ-புத்ர:
ருண-நாசம் கரோது மே ॥

(கணேச ஸ்தோத்ரம்-கடன்களை நீக்குவது)

ஸிந்தூரம் எனும் சிவந்த தாதுப்பொருளின் நிறத்தை உடையவரும், இரு கைகளை உடையவரும், கணங்களின் தலைவரும், தொங்கும் தொந்தியை உடையவரும், தாமரை இதழின் மேல் (தாமரைப் பூவின்மேல்) அமர்ந்திருப்பவரும், ப்ரஹ்மா முதலிய தெய்வங்களால் உபசரிக்கப்படுபவரும், ஸித்தர்களோடு கூடியவருமான அந்த (எல்லோருக்கும் மேலான - ஒப்பற்ற) தேவனை (விநாயகனை) அடிபணிந்து வணங்குகிறேன்.

1. ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் (படைக்கும் தொழிலைத் தொடங்குவதற்கு முன்) பயன் நிறைவேற வேண்டி ப்ரஹ்மாவினால் நன்கு பூஜிக்கப்பட்டவரும் பார்வதீ தேவியின் புதல்வருமான கணேசர் எப்பொழுதும் என் கடன்களை (நான் பட்ட கடன்களை) நீக்கட்டும்.

2. த்ரிபுரஸ்ய வதா^{4}த்பூர்வம் சம்பு^{4}னா ஸம்ய க^{3}ர்சித:
ஸதை^{3}வ......
...கரோது மே ||

3. ஹிரண்யகசிப்வாதீ^{3}னாம் வதா^{4}ர்தே^{2} விஷ்ணுனார்சித: |
ஸதை^{3}வ.........
...கரோது மே ||

4. மஹிஷஸ்ய வதே^{4} தே^{3}வ்யா க^{3}ணநாத^{2}: ப்ரபூஜித: |
ஸதை^{3}வ.........
...கரோது மே ||

5. தாரகஸ்ய வதா^{4}த் பூர்வம் குமாரேண ப்ரபூஜித: |
ஸதை^{3}வ.........
...கரோது மே ||

---

2. த்ரிபுரத்தை (அரக்கர்களின் இருப்பிடமான மூன்று உலோக மயமான நகரங்களின் கூட்டத்தை) அழிப்பதற்கு முன் சிவனால் நன்கு அர்ச்சிக்கப்பட்ட (பூஜை செய்யப்பட்ட)வரும், பார்வதீ தேவியின் புத்ரருமான கணேசர் நான் பட்ட கடன்களை எப்பொழுதும் நீக்கட்டும்.

3. ஹிரண்யகசிபு முதலானோரை அழிப்பதற்காக விஷ்ணுவினால் அர்ச்சிக்கப்பட்டவரும் பார்வதீ புத்ரருமான கணேசர் எப்பொழுதும் நான் பட்ட கடன்களை நீக்கட்டும்.

4. மஹிஷாஸுரனுடைய வதத்திற்காக (பார்வதீ) தேவியால் நன்கு பூஜிக்கப்பட்ட அக்கணநாதர், பார்வதியின் புத்ரர், எப்பொழுதும் நான் பட்ட கடன்களை நீக்கட்டும்.

5. தாரகாஸுரனைக் கொல்வதற்கு முன் குமாரரால் (ஸுப்ரஹ்மண்யரால்) நன்கு பூஜிக்கப்பட்டவரும் பார்வதியின் புத்ரருமான கணேசர் எப்பொழுதும் என் கடன்களை நீக்கட்டும்.

6\. பா⁴ஸ்கரேண க³ணேசோ ஹி பூஜிதச்ச¹ஸ்வஸித்³தயே।
ஸதை³வ......... ...கரோது மே ॥
7\. சசினா காந்தி-வ்ருத்³த⁴யர்த²ம் பூஜிதோ க³ணநாயக: ।
ஸதை³வ......... ...கரோது மே ॥
8\. பாலனாய ச¹ தபஸாம் விச்வாமித்ரேண பூஜித: ।
ஸதை³வ......... ...கரோது மே ॥
இத³ம் ருண-ஹரம் ஸ்தோத்ரம் தீவ்ர-தா³ரித்³ர்ய-நாசனம் ।
ஏக-வாரம் படே²ந்நித்யம் வர்ஷமேதத் ஸமாஹித: ।
தா³ரித்³ர்யம் தா³ருணம் த்யக்த்வா குபே³ர-ஸமதாம் வ்ரஜேத்

6\. ஸூர்ய தேவனால் தன் வெற்றிக்காக (உலகங்களுக்கு ப்ரகாசத்தை அளித்து சுற்றிவரும் தன் கார்யம் நிறைவேறுவதற்காக) பூஜிக்கப்பட்டவரும் பார்வதியின் புத்ரனுமான கணேசர் எப்பொழுதும் என் கடன்களை நீக்கட்டும்.

7\. சந்திரனால் தன் ஒளி வளர்வதற்காகப் பூஜிக்கப்பட்டவரும் பார்வதியின் புத்ரனுமான கணநாயகர் எப்பொழுதும் என் கடன்களை நீக்கட்டும்.

